# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 166/2024
Prosecution witness for P.W. 20

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சிவசுப்பிரமணியன் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கடம்புரில் குடியிருந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் போலிஸ் விசாரணையில் எனது உறவினரான 2ம் எதிரிக்கு கடந்த 10 வருடங்களுக்கு முன்பு 9597349999 என்ற எண் கொண்ட Airtel Sim card ஐ நான் வாங்கி கொடுத்தாகவும், அந்த தேதியில் இருந்து 2ம் எதிரி, அதை பயன்படுத்தி வந்ததாகவும், 2ம் எதிரி 01.04.2024 அன்று தனது மாமனாரை லாரியில் ஏற்றி கொலை செய்ததாக கேள்விபட்டதாக சொல்லியுள்ளேன்

என்றும் தற்போது 2ம் எதிரி என் உறவினர் என்பதால் அவரை இந்த வழக்கில் இருந்து காப்பற்றுவதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.08.06 19:59:12 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 166/2014

Prosecution witness for P.W. 21

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. சீதாலட்சுமி** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வெம்பூர் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு குமரகிரி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது 04.04.2024 அன்று நான் எட்டையபுரத்தில் தங்கி இருந்தபோது ஆய்வாளர் எனக்குகைபேசிமூலம் தொடர்பு கொண்டு குமரகிரி கிராமத்தில் 01.04.2024 அன்று ஒரு விபத்து போல இருந்தது என்றும், ஆனால் அது விபத்து இல்லை என்றும், ஆனால் கொலை என்றும், அது சம்பந்தமாக என்னை காவல் நிலையத்திற்கு வரசொல்லியிருந்தார். நானும் என் உதவியாளர் சிவகுமார் என்பவரும், எட்டையபுரம் காவல் நிலையத்திற்கு காலை சுமார் 5.30 மணியளவில் சென்றோம். அப்போது காவல் ஆய்வாளர் தோல்மாலைப்பட்டி கிராமத்தில் எதிரிகள் இருப்பதாகச் சொல்லி எங்களைஅழைத்தார்கள். நாங்கள் போலிசாருடன் அங்கு சென்றோம். அங்கு நாகராஜ் என்பவரை போலிசார் கைது செய்தார்கள். அப்போது போலிசார் 3ம் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எங்கள் முன்பாக பதிவு செய்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.14**. இந்த ஆவணம்

எதிரிகள் தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி நாகராஜன் தோல்மாலைப்பட்டியில் தனகு வீட்டிற்கு அழைத்துச்சென்று OPPO கைபேசி ஒன்றையும் பணம் ரூா.5000 ஐயும் ஆஜர் செய்ததை போலிசார் மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.15.** மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சிவராமன் என்பவரை கைது செய்வதற்காக எங்களை அழைத்துச் சென்றார்கள். கோவில்பட்டியில் செவக்காடு என்ற பகுதியில் காலை 08.00 மணியளவில் மேற்படி எதிரி சிவராமனை அவரது அக்கா வீட்டிற்கு அருகில் கைது செய்து அவரிடம் போலீசார் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.16.** அதன் அடிப்படையில் அதே இடத்தில் மேற்படி சிவராமன் தன்னிடமிருந்து கைபேசி மற்றும் TN 96A 1467 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தையும் ஆஜர்படுத்தியதை போலீசார் மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.17,** எதிரி சிவராமன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி உடையார் என்பவரை கைது செய்ய போலீசார் எங்களை கோவில்பட்டியில் விநாயகர் நகர் என்ற பகுதிக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு எதிரி உடையாரை கைது செய்து விசாரித்தபோது, அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை போலீசார் பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.18.** அதன் அடிப்படையில் மேற்படி எதிரி உடையார் தன்னிடமிருந்து ஆஜர் செய்த VIVO கைப்பேசியையும், TN 72 CA 1616 என்ற பதிவெண் கொண்ட காரையும் போலீசார் மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம்

பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.19.** எதிரி உடையார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பன்னீர்குளம் என்ற பகுதிக்கு எங்களை அழைத்துச் சென்று எதிரி சிவராமன் வீட்டிற்கு அருகில் இருந்த TN21AK 3792 பதிவெண் கொண்ட ஒரு லாரியை போலீசார் மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த மகஜர் **அ.சா.ஆ.20.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை 04.04.2024 அன்று மதியம் 12.30 மணியளவில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். போலீஸ் விசாரணையில் நான் குமாரகிரி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்ததாக சொல்லியுள்ளேன். நான் எட்டயபுரம் கிராமத்தில் குடியிருந்ததாகவும், அதிகாலை 5.30 மணியளவில் என்னை எட்டயபுரம் காவல் ஆய்வாளர் அழைத்ததாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் காவல் நிலையத்திற்கு காலை 5.50 மணியளவில் போய்விட்டேன். 01.04.2024 அன்று விபத்து என்று நினைத்த சம்பவம் கொலை வழக்காக இருப்பதாக சொல்லி போலீசார் எங்களை அழைத்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். எதிரி சிவராமன் என்பவரிடம் TN 96A 1467 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை போலீசார் கைப்பற்றியதாகவும் போலீஸ் விசாரணையில் சொன்னேன். உடையார் தலைவர் என்பவரை போலீசார் கைது செய்ததாகவும், அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் போலீஸ் விசாரணையில் சொன்னேன். நான் 10 ஆண்டுகளாக கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருக்கிறேன். என் அலுவலகம் அப்போது எட்டயபுரத்தில் இல்லை. இளம்புவனம் கிராமத்தில் இருந்தது. என் சொந்த ஊர் சிவகாசி. நான் ஒவ்வொரு நாளும் சிவகாசியில் இருந்து வந்து சென்று கொண்டிருந்தேனா என்றால்

எட்டயபுரத்தில் தங்கியிருந்தேன். நான் என் அலுவலக எல்லைக்கு வெளியே குடியிருந்தால் அதற்கான அனுமதியை மேலதிகாரிகளிடம் பெற வேண்டும் என்றால் சரிதான். நான் என் அலுவலக ரீதியில் வெளியே சென்றால் துறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுத்தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். 04.04.2024 அன்று காவல் ஆய்வாளர் அழைத்ததன் பேரில்தான் நான் சென்றேன். என் உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் செல்லவில்லை. கிராம நிர்வாக அலுவலகத்தில் என் அன்றாட பணிகள் குறித்து நாளேட்டில் எழுத வேண்டும் என்றால் முன்பு அந்த நடைமுறை இருந்தது. அதை அரசாணை போட்டு எடுத்து விட்டார்கள். என் அலுவலக அதிகார எல்லைக்குள் குற்றம் நடந்தாலோ, விபத்து நடந்தாலோ, சந்தேக மரணம் ஏற்பட்டாலோ அதுகுறித்து அரசுக்கு வட்டாட்சியர் மூலமாக அறிக்கை செய்ய வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நான் அரசுக்கு அறிக்கை செய்யவில்லை என்றால் சரியல்ல. 01.04.2024 அன்று அறிக்கை செய்தேன். எழுத்து மூலமாக அறிக்கை செய்தேனா என்றால் whats app மூலமாக அறிக்கை செய்தேன். whats app மூலமாக அறிக்கை செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 01.04.2024 அன்று ஏற்பட்ட மரணம் சந்தேகத்திற்குரிய மரணம் என்றால் சரிதான். சந்தேகத்திற்குரிய மரணம் ஏற்பட்டதால் போலீசார் வழக்கு பதிவு செய்து வருவாய் துறையினருக்கு முதல் தகவல் அறிக்கையை அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் என்ற முறையில் நானும் கள விசாரணை செய்து சாட்சிகளின் வாக்குமூலங்கள் பதிவு செய்து ஒரு அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. தோல்மலைபட்டி என்பது எட்டயபுரத்தில் சுமார் 6 கி.மீ தூரத்தில் இருக்கும். தோல்மலைபட்டி என்பது விருதுநகர் மாவட்டத்தில் உள்ளது என்றால் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது.

தோல்மலைபட்டி என்பது குமாரகிரி கிராம நிர்வாக அலுவலக எல்லைக்குள் இல்லை என்றால் சரிதான். கோவில்பட்டி என்பது தனி வட்டம் என்றால் சரிதான். பன்னீர்குளம் என்பது கயத்தார் வட்டத்திற்குள் உள்ளது. பன்னீர்குளத்திற்கும் குமாரகிரி கிராமத்திற்கும் இடையில் சுமார் 40 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். பன்னீர்குளம் கிராமத்திற்கு கயத்தாரிலிருந்து சுமார் 15 கி.மீ. உள்ளே செல்ல வேண்டும் என்றால் சரிதான். கோவில்பட்டியிலிருந்து பன்னீர்குளம் கிராமத்திற்கு சுமார் 45 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். கிட்டத்தட்ட ஒருநாள் நான் என் அலுவலக அதிகார எல்லைக்கு வெளியே இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலங்களை யார் யார் பதிவு செய்தார்கள் என்றும், எத்தனை பக்கங்கள் பதிவு செய்யப்பட்டது என்றும் அதில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்றும் எனக்கு நேரில் தெரியாது என்றால் என் முன்பாகத்தான் பதிவு செய்தார்கள். ஆனால் அதில் எத்தனை பேர் கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. வாக்குமூலங்கள் எத்தனை பக்கங்கள் கொண்டது என்பதும் எனக்கு தெரியாது. வாக்குமூலங்களை ஒரு காவலர் பதிவு செய்தார். அவர் பெயர் தெரியாது. பந்துமுனை பேனாவால் வாக்குமூலங்கள் எழுதப்பட்டது. மேற்படி மூன்று எதிரிகளின் வாக்குமூலங்களும் ஒரே நபரால் எழுதப்பட்டது. நான் அன்றைய தேதியில் 6 கையொப்பங்கள் போட்டேன். நான் தமிழில்தான் கையொப்பம் போடுவேன். நான் அரசு ஊழியர் என்ற முறையில் வழக்கமாக என் கையொப்பமிட்டு அதற்கு கீழ் என் பணிநிலை எழுதுவேன் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் என்று கீழே எழுதுவேன் என்றால் சரிதான். அன்றைய தேதியில் என் பணிநிலையை குறிப்பிட்டுதான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என் உதவியாளரும் அவரது பணிநிலையை குறிப்பிட்டுத்தான் கையொப்பமிடுவது வழக்கம் என்றால்

சரிதான். அன்றைக்கு தயார் செய்யப்பட்ட முதல் விசாரணையில் சொல்லப்பட்ட அனைத்து ஆவணங்களையும் மேற்படி ஒரே காவலர்தான் தயார் செய்தார் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக சொல்வது பொய் என்றும், எந்த எதிரியிடமும் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் உள்ள ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள கையொப்பங்கள் என் கையொபப்ங்கள் அல்ல என்றால் சரியல்ல. எட்டயபுரம் காவல் நிலைய வேறு வழக்குகளுக்கும் இதேபோல சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள கையொப்பங்களை என் கையொப்பத்தின் பரிச்சயத்தை வைத்து காவல் ஆள்வாளரே போட்டுக் கொண்டார் என்றால் சரியல்ல. அதனால்தான் மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள கையொப்பங்கள் மாறுபட்டுள்ளன என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள வாசகங்களை எழுதிய கையெழுத்துக்கள் வேறு வேறு நபரால் எழுதப்பட்டுள்ளன என்றால் சரிதான். அதேபோல் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள வாசகங்கள் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள வாசகங்களின் கையெழுத்திலிருந்து மாறுபட்டுள்ளது என்றால் சரிதான். பன்னீர்குளம் என்ற கிராமம் கயத்தாருக்கு எந்த திசையில் உள்ளது என்று எனக்குத் தெரியாது. பன்னீர்குளம் என்ற கிராமம் நடுநிலை கிராமம்தான். சாலை வசதி உள்ளது. எதிரிகளை கைது செய்ததாக சொல்லும் இடத்தில் எதிரியுடன் யார் யார் இருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது என்றால் சரிதான். எதிரிகளின் வீடுகள் குடிசை வீடா, ஓட்டு வீடா அல்லது காரை வீடா என்பதும் எனக்குத் தெரியாது. அன்றைய தேதியில் காவல் ஆய்வாளருடன்

என்னையும் சேர்த்து மொத்தம் 4 பேர் போனோம். ஆய்வாளர் கைபேசியில் என்னிடம் எதிரிகளைப் பிடித்து வைத்திருப்பதாகவும் காவல் நிலையம் வரவேண்டும் என்றும் சொன்னாரா என்றால் அப்படிச் சொல்லவில்லை. நான் காவல் நிலையம் சென்ற பிறகு 10 நிமிடம் கழித்து என் உதவியாளர் வந்தாரா என்றால் அவர்தான் என்னை காவல் நிலையம் அழைத்துச் சென்றார். நான் என்னை தயார் செய்து கொண்டு காவல் நிலையம் செல்வதற்கு சுமார் 30 நிமிடம் ஆனதா என்றால் உடனே போய்விட்டேன். நான் சொன்ன காலத்திலும், சொன்ன நேரத்திலும் நான் குமாரகிரி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இல்லை என்றால் சரியல்ல. என் முன்பாக இந்த வழக்கில் எந்த சான்றுபொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் தோல்மலைபட்டி, கோவில்பட்டி செவக்காடு மற்றும் பன்னீர்குளம் ஆகிய கிராமங்களுக்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கிராமங்களுக்கு முன்பின் போகவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாகராஜன், சிவராமன் ஆகிய எதிரிகளை போலீசார் 02.04.2024 அன்றே காவல் நிலையத்தில் வைத்திருந்தனர் என்றால் சரியல்ல. 2ம் எதிரியை 03.04.2024 அன்றே போலீசார் காவல் நிலையத்தில் வைத்திருந்தனர் என்றால் சரியல்ல. காவல் நிலையத்திலேயே போலீசார் ஆவணங்களை தயாரித்துக் கொண்டு என் கையொப்பத்தை ஆய்வாளரே போட்டுக் கொண்டார் என்றால் சரியல்ல. அதனால்தான் எதிரிகளின் இருப்பிடமும், இருப்பிட சூழ்நிலை பற்றியும் எனக்குத் தெரியவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் நான் துறை அனுமதி பெற்று

போலீசாருடன் போகவில்லை என்றால் சரியல்ல. என் முதல்விசாரணை சாட்சியம் உண்மைக்குப் புறம்பானது என்றால் சரியல்ல

(மேற்படி குறுக்கு விசாரணை 1, 3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. )

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.08.06 19:59:32 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.